தோல்வியடையும் நாடுகளின் பட்டியலில் இலங்கைக்கு இடம்

உதயன்

ஆசிரியர் தலையங்கம்

தோல்வியுற்ற நாடுகளின் வரிசையில் மீண்டும் இலங்கைக்கு 'உயரிய' இடம் உலகளாவிய ரீதியில் கிடைத்திருக்கின்றது.

'சமாதானத்துக்கான வெளிநாட்டுக் கொள்கை மற்றும் நிதி' என்ற சர்வதேச அமைப்பு வருடா வருடம் வெளியிடும் தோல்வியுற்ற நாடுகளின் வரிசையிலேயே இம்முறையும் இலங்கை தனது ஸ்தானத்தை உறுதிப் படுத்திக் கொண்டிருக்கின்றது.

அறுபதில் இருபது

மொத்தம் அறுபது நாடுகள் தோல்வியுறும் தேசங் களின் வரிசையில் இருக்கின்றன என அந்த சர்வதேச அமைப்பு பட்டியலிட்டிருக்கின்றது.

அந்தப் பட்டியலில் முதலாவது இடம் சோமாலிய நாட்டுக்கு.

இருபதாவது இடத்தை இலங்கை பெற்றுக் கொண்டு தனது 'பெருமையை'(?) வெளிப்படுத்தி யிருக்கின்றது.

இந்த நாட்டில் இடம்பெறும் ஆட்சி முறையின் சீத்துவத்தையும், அராஜகங்களின் அத்துமீற லையும், ஊழல், துஷ்பிரயோகம், மோசமான பொருளாதாரக் கொள்கை, தனது நாட்டு மக்கள் எனத் தான் உரிமை கோரும் ஒரு சிறுபான்மை இனக்குழுமத்தின் மீதே அரசு வெளிப்படுத்தி வரும் போர் வெறிப் போக்கு போன்றவற் றையும் நோக்கும் போது அடுத்து வரும் வருடங்களில் இந்தப் பட்டியலில் இருபதாவது இடத்திலிருந்து மேலும் பல படிகள் இலங்கை முன்னேறி தோல்வி வரிசையில் முன்னுரிமை நிலை பெறும் என்பது திண்ணம்.

இலங்கையின் பொருளாதார நிலைமை குறித்து வெளியாகும் புள்ளி விவரங்கள் இந்தத் திசையை நோக்கித்தான் இலங்கைத் தேசம் சென்று கொண்டி ருக்கின்றது என்பதை நமக்குத் துலாம்பரமாக வெளிப் படுத்தி நிற்கின்றன.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி எதிர்பார்க்கப்பட்டதை விட இவ்வருடத்தில் மிக மோசமானதாக இருக்கப் போகின்றது என்ற அதிர்ச்சித் தகவலைப் பொருளாதார நிபுணர்கள் இப்போது வெளியிட்டிருக்கின்றார்கள்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகள் மற்றும் பின்னடைவுகள் ஆகியவற்றுக்கு மத்தி யிலும் இந்த வருடத்தில் குறைந்த பட்சம் ஏழு வீதமாவது பொருளா தார வளர்ச்சி வீதம் இருக்கும் என இரண்டு வாரங்களுக்கு முன்னர் இலங்கை மத்திய வங்கி அறிவித்திருந்தது.

பணவீக்கம்

பணவீக்கம் எகிறிக் கொண்டிருந்தாலும் இறுக்க மான நாணய நிதிக் கொள்கையைக் கடைப்பிடிப் பதன் மூலம் இந்தப் பொருளாதார வளர்ச்சி வீதத்தை எட்டமுடியும் என்றும் மத்திய வங்கி நம்பிக்கை வெளியிட்டிருந்தது.

ஆனால் அது சாத்தியப்படாது என்பது இப்போது தெளிவாகிவிட்டது. கடந்த நான்கு வருட காலத்தில் ஆகக் குறைந்த பொருளாதார வளர்ச்சி வீதத்தை இந்த ஆண்டு இலங்கை காட்டப் போகிறது. இந்த வருடத் தில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி ஆக 5.8 வீதமாகவே அமையும் என்று பொருளாதார விவகாரங்களைத் தர நிர்ணயம் செய்யும் மலேசிய நிறுவனத்தின் சிரேஷ்ட பொருளாதார நிபுணர் குறிப்பிட்டிருக்கின்றார்.

2007 இல் 7.5 வீத பொருளாதார வளர்ச்சி வீதத்தை எட்ட முடியும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் ஆக 6.8 வீத வளர்ச்சியே அப்போது எட்டப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

அது இப்போது மேலும் 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதைபோல' 5.8 வீதத்துக்குப் படுத்துவிட்டது.

இதேசமயம், இலங்கையில் பணவீக்கமும், விலைவாசி உயர்வும், மோசமாக உயர்ந்துள்ளன. இந்தப் பிராந்தியத்தில் எந்த நாட்டிலும் இல்லாத வகையில் இலங்கையில் பணவீக்கம் முப்பது வீதத்தைத் தொட்டு நிற்கின்றது.

கழுதை தேய்ந்து

எரிபொருள் உட்பட சகல அத்தியாவசியப் பொருள்களினதும் விலைகள் அதிகரித்து, வானத்தைத் தொட்டுள்ளன.

இந்தப் பொருளாதார நெருக்கடிகளுக்கும், மோச மான விலைவாசி உயர்வுக்கும், பணவீக்கப் பிரச் சினைக்கும் உலக சந்தையில் பொருள்களின் விலை உயர்வே முக்கிய காரணம் என்று கூறி இலங்கை அரசு தனது தவறை வேறு தரப்புகள் மீது சுமத்தித் தப்பிப் பிழைக்கப் பார்க்கின்றது.

உலக நாடுகளில் எரிபொருள் உட்படப் பல அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் உயர்ந்துள்ளன என்பது உண்மைதான்.

விலையுயர்வு

ஆனால் அதற்காக இந்தப் பிரதேசத்தின் ஏனைய நாடுகள் எல்லாம் உலக சந்தையில் எரிபொருள் விலை உயர்வுக்கு ஏற்ப தமது நாட்டிலும் எரிபொருளின் விலையில் உயர்வை ஏற்படுத்த முயற்சிக்கவில்லை. அதுபோலவே ஏனைய அத்தியாவசியப் பொருள்களின் விலைகளையும் அவை அதிகரிக்கவும் இல்லை.

அவை எல்லாம் ஏதோ ஒரு வகையில் சர்வதேசப் பிரச்சினைக்கு ஏற்ற வகையில் தமது பொருளாதார நிலைப்பாடுகளை மாற்றியமைத்து, சர்வதேச மட்டத்திலான விலை உயர்வு தமது மக்களையும் எட்டிப் பாதிப்பை ஏற்படுத்த விடாமல் பார்த்துக் கொள்கின்றன.

ஆனால் இலங்கையில் மட்டும்தான், சர்வதேச விலை உயர்வைக் காட்டி தனது நாட்டு மக்களின் தலை யில் மிளகாய் அரைக்க முயற்சிக்கின்றது.

இந்த அரசுத் தலைமையின் பொறுப்பற்ற போக் குக்காக இலங்கைத் தீவு முழுவதுமே பொருளாதார நிலையில் பின்தங்கி, பெரும் விலை கொடுக்க வேண்டிய கட்டாய இக்கட்டை எதிர்கொள்ளும் கட்டத்துக்கு வந்திருக்கின்றது.

இனி தமிழினம்

குனியாது

எமை எதிர்த்திட

பகை துணியாது

Editorial, Lankadesissent

RAJAPAKSA CENTRALISATION WOULD ASSURE AN EELAM

Four petitions to the Supreme Court, two by the UNP and two by the JVP, requesting it to declare the dissolution of the two Provincial Councils North-Central and Sabaragamuwa null and void were all dismissed last Friday, by the Supreme Court. For the judiciary they are all legal interpretations. If the law provides any provision for the Governors of the provinces to dissolve the PC's, then the dissolution is "legally" right. Before that comes the political issue on "Devolution". This whole war carried over for two and a half decades and still hyped, is pivoted on devolution of power. Over sharing of power in this State.

Over the years since independence, what the Tamil political leaders asked for was a justifiable share in State power, for them to mingle with their own daily life, in predominantly Tamil areas. With those aspirations denied, the shift from those democratic demands through democratic agitations and protests to forcible cessation to establish a separate State for the Tamils, is at least a 60 year history in this country.

The issue of a "Separate Tamil State" on Sri Lankan soil is therefore an issue of the Sinhala South refusing to share power, with any other ethnic or religious polity. The most closest solution offered as an alternative was the Provincial Councils under the 13th Amendment to the Constitution, engineered by the Rajiv Gandhi government in 1987 July.

Over the years since independence, what the Tamil political leaders asked for was a justifiable share in State power, for them to mingle with their own daily life, in predominantly Tamil areas

Why the PC's failed

Why the PC's failed as an alternative to the Separate State, is not because the South did not accept it as a "closer home" democratic power institute, but because the whole constitutional mechanism had plenty of duality and ambiguity in devolving power. That was quite rightly suspected by all militaristic Tamil groups, though India persuaded the EPRLF to contest the first PC elections in 1988.

From the very start, the Colombo government did not devolve enough power. Not even those that were legitimately due and constitutionally accepted to the provinces. There is this craving desire to keep all power with the Colombo government and that is one major reason why no political solution can be negotiated. That is the reason why even moderate Tamil people would not believe in any promise for devolution.

Puppet Council in the East

While this government claims it would implement the 13th Amendment in full, it has to date made no attempt to give all those powers to their own puppet Council in the East, which they promote as a very democratic provincial institute. Meanwhile the government has used its constitutional ability to dissolve two other Councils without even consulting the Council. If this is how the PC's could exist, if the PC's are going to be at the mercy of the Colombo government, they are not devolved instruments even the moderate would want to sit in. For the government in Colombo would keep using them for their own political advantage. That's not what the PC's were and are meant for, even if the 13th Amendment is implemented in full.

Right to dissolve PC's

If the Colombo government retains the right to dissolve PC's this way for their own political gambling, can Sangarees and Devanandans accept them as enough ? This certainly defeats the very essence of power devolution to the provinces and the government is certainly proving there will be no such thing as shared power in this country, as long as the Rajapaksa regime is there. The corollary of this political behaviour in Colombo is a "Separate Tamil State" and the Rajapaksa government can go down in history as the Southern Sinhala regime that facilitated and assured a Thamil Eelam.

ஒரு பேப்பர் ORU PAPER